மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஓர் அரசு விழாவில் நான் கலந்துகொண்டபோது, அதுகுறித்து என்னிடத்திலே சொன்னார். உடனடியாக மாவட்ட ஆட்சியரிடத்தில் தெரிவித்தவுடன், மாவட்ட ஆட்சியரும் அதற்குண்டான இடத்தை உடனடியாக ஒதுக்கித் தருவதாகச் சொல்லியிருக்கின்றார். ஒரு வாரத்திற்கு முன்பாக, சட்டமன்றக் கூட்டத் தொடர் தொடங்கவிருக்கின்றது என்ற காரணத்தினால், நான் மாவட்ட ஆட்சியரிடம் அதுகுறித்து கேட்டேன். அந்தப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்று சொல்லியிருக்கின்றார். அங்கு துணை மின் நிலையம் அமைக்க இடம் கிடைத்தவுடன், கூடிய விரைவில் அந்தப் பணி மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 9, மாண்புமிகு உறுப்பினர் திரு. சே. கருணாஸ், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

9—

புதிய கலையரங்கம்

***5764—திரு. சே. கருணாஸ்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாடனை தொகுதி, ஆர்.எஸ். மங்கலம் ஊராட்சி ஒன்றியம், சிறுநாகுடி ஊராட்சி, புத்தூர் கிராமத்தில் புதிய கலையரங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவாடனை தொகுதி, ஆர்.எஸ். மங்கலம் ஊராட்சி ஒன்றியம், சிறுநாகுடி ஊராட்சி, புத்தூர் கிராமத்தில்

2020 ஜனவரி 8]

புதிய கலையரங்கம் அமைப்பது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் செல்லப்பட்டு தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சே. கருணாஸ் அவர்கள்.*

திரு. சே. கருணாஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீதியை நிலைநிறுத்துவதற்கான சட்டங்கள் ஆதிகாலத்தில் உருவாக்கப்பட்டன. இன்றைய நீதியானது சட்டத்திற்காக கை கழுவப்படுகிறது" என்று 50 ஆண்டுகளுக்கு முன்பாக, இதே அவையில் உரைத்த என் தெய்வத் திருமகன் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரை வணங்குகிறேன்.*

> *"காலத்தி னால்செய்த நன்றி சிறிதுஎனினும்*
> *ஞாலத்தின் மாணப் பெரிது."*

என்ற, வெள்ளை உடை அணிந்து இந்த அவையிலே வீற்றிருக்கும் வள்ளுவரின் வாக்குக்கிணங்க, என் சமூகத்தில் எத்தனையோ பெருந்தலைவர்கள் இருந்தும், என்னை அரசியலுக்கு அடையாளம் காட்டிய, எனக்கான தொகுதி, மற்ற விவரங்களைப் பரிசீலனை செய்வதற்காக புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அன்றைக்கு நியமனம் செய்யப்பட்ட இன்றைய முதல்வராக இருக்கக்கூடிய அருமை அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கும், மாநிலங்கள் அவை உறுப்பினராக இருக்கக்கூடிய திரு. வைத்தியலிங்கம் அவர்களுக்கும் இந்த நேரத்திலே நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். காரணம், அவர்கள் இருவரும்தான் என்னைப்பற்றி ஆராய்ச்சி செய்து, பல கேள்விகள் கேட்டு, என்னைப் பற்றிய விவரங்களை சரியாக அம்மா அவர்களிடத்திலே எடுத்துச் சொல்லி, இந்த அவையில் பணியாற்ற வாய்ப்பை உருவாக்கினார்கள். அதனடிப்படையில், இன்றைக்கு நடந்து முடிந்த உள்ளாட்சித் தேர்தலிலே எங்கள் முக்குலத்தோர் புலிப் படைக்கு சில இடங்களை ஒதுக்கினார்கள். அதிலே மூன்று இடங்களிலே வெற்றி பெற்றிருக்கிறோம். பார்வர்டு பிளாக் இயக்கத்திற்குப் பிறகு, தமிழகத்திலே முக்குலத்தோர் சமூகம் சார்ந்த ஒரு சமுதாயத்திற்கான அறிவுசார்ந்த அரசியலை எடுத்துச் செல்வதற்கு எனக்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்த புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், இன்றைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், இங்கே

இருக்கக்கூடிய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றிகளை இந்த நேரத்திலே உரித்தாக்கிக் கொள்கிறேன்.

என்னுடைய திருவாடனை தொகுதி, ஆர்.எஸ். மங்கலம் ஊராட்சி ஒன்றியம், சிறுநாகுடி ஊராட்சி, புத்தூர் கிராமத்தில் ஒரு கலையரங்கம் கட்டித் தர வேண்டுமென்று அந்தப் பகுதி மக்கள் நீண்டநாள் கோரிக்கையாக வைத்திருக்கிறார்கள். இதற்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நீங்கள் கட்டிக்கொள்ளலாம் என்று சொல்லலாம். ஆனால், எனது தொகுதியில் அதிகமான கிராமங்கள் இருக்கின்றன. அவை மிக மிக உள்பகுதியில் இருக்கக்கூடிய கிராமங்களாகும். இந்த நிலையில், அவர்களுடைய தேவைகள் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், வருடத்திற்கு அரசு நிர்ணயித்திருக்கக்கூடிய, அதாவது ஒதுக்கியிருக்கக்கூடிய ரூபாய் 90 இலட்சத்தைக் கொண்டு, குறிப்பிட்ட பணிகளுக்குத்தான் செலவு செய்ய வேண்டுமென்று நிபந்தனைகள் இருக்கின்ற காரணத்தினால், மக்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றுவதிலே எனக்கு இடர்ப்பாடு இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், பெருமனதோடு எனக்கு என் தொகுதியிலே வருடத்திற்கு 10 கலையரங்கங்கள் கட்டிக் கொடுப்பதற்கு முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாடனை தொகுதி, ஆர்.எஸ். மங்கலம் ஊராட்சி ஒன்றியம், சிறுநாகுடி ஊராட்சியில் 8 குக்கிராமங்கள் உள்ளன. அவற்றில் சுமார் 1,337 பேர் வசித்து வருகின்றனர். புத்தூர் குக்கிராமத்தில் மட்டும் சுமார் 354 பேர் வசித்து வருகின்றனர். புத்தூரில் அனைத்து சமுதாயத்தினரும் வசித்து வருவதால், திருவிழாக்கள் மற்றும் கலைநிகழ்ச்சிகள் நடத்துவதற்கு கலையரங்கம் அவசியமாகிறது. பொதுவாக ஊராட்சிகளில் கலையரங்கம் கட்டுவதற்கு சட்டமன்ற உறுப்பினரின் பரிந்துரையின்பேரில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டப்படும். அதில் உறுப்பினருடைய பெயரைப் போடுவார்கள். அதை அனைவரும் விரும்புவார்கள். அது எப்பொழுதும்

2020 ஜனவரி 8]

காலங்காலமாக இருக்கும். சட்டமன்ற உறுப்பினர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் அதைத்தான் விரும்புவார்கள். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அரசு நிதியில் கட்டவேண்டுமென்று கேட்டிருக்கிறார். புத்தூரில் கலையரங்கம் கட்டுவதற்கு போதுமான இட வசதி உள்ளதால், அங்கு புதிய கலையரங்கம் கட்டுவது குறித்த மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சே. கருணாஸ் அவர்கள்.*

திரு. சே. கருணாஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கு நிறைய இடங்கள் இருக்கின்றன; எல்லா ஊர்களிலும் இடங்கள் இருக்கின்றன; ஊருக்கான பொது இடங்கள் இருக்கின்றன. அதனால், கலையரங்கம் கட்டுவதற்கு நீங்கள் ஆவன செய்ய வேண்டும். அதேநேரத்தில் இராமநாதபுரம் ஒன்றியம், சக்கரக்கோட்டை ஊராட்சி, நேரு நகர் முதல் சக்கரக்கோட்டை இரயில்வே கேட் வரை சாலைகள் எல்லாம் மிகவும் பழுதடைந்து குண்டும்குழியுமாக இருக்கின்றன. அந்தப் பகுதியில் ஓட்டு போட்ட மக்களெல்லாம் என்னிடம் கேள்வி கேட்கிறார்கள். அதனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பெருமனதோடு, அந்தப் பகுதியிலுள்ள சாலைகளை, ECR போல் பளபளவென்று போட்டுக் கொடுத்தால், மிகவும் உதவியாக இருக்கும் என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.*

முற்பகல் 10–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மூலக் கேள்விக்கு சம்பந்தமில்லாத கேள்வியைக் கேட்டிருந்தாலும்கூட, தன்னுடைய தொகுதி மக்கள்மீது கொண்டுள்ள அக்கறையின் காரணமாக இக்கேள்வியைக் கேட்டிருக்கின்றார்கள். மாண்புமிகு*

உறுப்பினர் அவர்கள், அங்கிருக்கக்கூடிய சாலைகளில், எந்தச் சாலைகள் பழுந்தடைந்துள்ளன என்பதைக் குறிப்பிட்டுச் சொல்வார்களேயானால், அந்தச் சாலைகள் கண்டிப்பாகச் சீரமைத்துத் தரப்படும்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசின் நடவடிக்கைகளால், கிட்டத்தட்ட 1 இலட்சத்து 2 ஆயிரம் கிலோ மீட்டர் அளவிற்கு இருந்த கிராமச் சாலைகளை, இன்றைக்கு 1 இலட்சத்து 49 ஆயிரம் கிலோ மீட்டர் அளவிற்கு உயர்த்தியிருக்கிறோம்; அதிகமான கிராமச் சாலைகளை அமைத்திருக்கிறோம். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், எந்தச் சாலைகள் என்று குறிப்பிட்டுச் சொன்னால், அது கிராமச் சாலைகளாக இருந்தாலும் சரி, பேரூராட்சி சாலைகளாக இருந்தாலும் சரி, நகராட்சி சாலைகளாக இருந்தாலும் சரி, அந்தச் சாலைகள் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, உடனடியாக சீரமைத்துத் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.எஸ். இன்பதுரை அவர்கள்.

திரு. ஐ.எஸ். இன்பதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நீரின்றி அமையாது உலகு' என்றான் வள்ளுவன். தமிழ்நாட்டிலே குடிமராமத்து திட்டம், ஆங்காங்கே கட்டப்பட்டு வருகின்ற தடுப்பணைகள், என்னுடைய ராதாபுரம் தொகுதியில் அதிவிரைவாகச் செயல்படுத்தப்பட்டு வருகிற தாமிரபரணியாறு—நம்பியாறு—கருமேனியாறு இணைப்பு போன்ற நீர்ப் பாசனத் திட்டங்களைச் செயல்படுத்துவதால், "நீர் இல்லாமல் இனி அமையாது தமிழகம்" என்று தமிழக மக்கள் நம்முடைய முதலமைச்சர் அவர்களை வாயார வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தச் சூழ்நிலையில், எங்களுடைய ராதாபுரம் சட்டமன்றத் தொகுதியிலுள்ள திசையன்விளையை ஒரு தனித் தாலுகாவாக அமைத்துத் தந்தவர், நம்முடைய முதலமைச்சர் மாண்புமிகு எடப்பாடியார் அவர்கள். கேட்டதையெல்லாம்

2020 ஜனவரி 8]

கொடுப்பார் என்ற சூழ்நிலையிலே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான இந்த அரசிடம் நான் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். ராதாபுரம் தனித் தாலுகா; எனவே, ராதாபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் இருக்கிற திசையன்விளையை தனி ஒன்றியமாக அமைக்க வேண்டும். ஏனென்றால், திருநெல்வேலி மாவட்டத்தில் இப்பொழுது தேர்தல் நடைபெறவில்லை; மறுசீரமைப்பு நடைபெறவிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில், திசையன்விளையை தனி யூனியனாக, தனி ஊராட்சி ஒன்றியமாக அமைத்துத் தர வேண்டுமென்று தொகுதி மக்கள் சார்பாக கேட்டுக்கொள்கிறேன். இது மூலக் கேள்விக்கு சம்பந்தமில்லாத கேள்வியாக இருந்தாலும்கூட, முக்கியமான கேள்வி என்பதனால், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடம் இந்த வேண்டுகோளை தங்கள் வாயிலாக வைத்து அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மூலக் கேள்விக்கு சம்பந்தமில்லாத கேள்வி என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களே சொன்னார்கள். இருந்தாலும்கூட, அங்கிருக்கக்கூடிய சூழ்நிலையைப் பொறுத்து, திசையன்விளையை தனி யூனியனாக அறிவிக்க வேண்டும் என்று கேட்டார்கள். அவ்வாறு அறிவிப்பதற்கு பல்வேறு விதிமுறைகள் இருக்கின்றன. தற்போது நீதிமன்றத்தில் பல்வேறு வழக்குகள் இருந்து வரும் நிலையில், உள்ளாட்சித் தேர்தல் நடத்தப்பட்டு வருகிறது. அங்கிருக்கக்கூடிய உள்ளாட்சிப் பிரதிநிதிகள், அங்குள்ள மாமன்றத்திலே தீர்மானத்தை நிறைவேற்றி, மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக, அங்கிருக்கக்கூடிய அங்கீகரிக்கப்பட்ட கட்சியினுடைய மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தையெல்லாம் நடத்தி, அரசின் பரிந்துரை கோரப்படின், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கண்டிப்பாக கொண்டு செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. புகழேந்தி அவர்கள்.*

[2020 ஜனவரி 8

திரு. சு. புகழேந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இயல், இசை, நாடகம் என்பது தமிழர்களுடைய கலாச்சாரத்தில் கலந்துவிட்ட ஒன்று. மூலக் கேள்வி கலையரங்கம் கட்டுவது தொடர்பாக இருப்பதால், நான் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். என்னுடைய மதுராந்தகம் தொகுதியைப் பொறுத்தவரை, நகர்ப்புறங்களும், கிராமப்புறங்களும் அதிகமாக இருக்கின்ற ஒரு தொகுதி. மதுராந்தகம் நகராட்சி, கருங்குழி பேரூராட்சி, அச்சரப்பாக்கம் பேரூராட்சி என்று இருந்தாலும், அச்சரப்பாக்கம் ஒன்றியத்தில் 59 ஊராட்சிகள் இருக்கின்றன; மதுராந்தகம் ஒன்றியத்திலே 58 ஊராட்சிகள் இருக்கின்றன. ஆண்டிற்கு ரூ.3 கோடி என சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி வழங்கப்பட்டாலும், அதில் வரையறுக்கப்பட்ட கூர் நிதி என்று ஒன்று உள்ளது. அந்த வரையறுக்கப்பட்ட கூர் நிதியிலிருந்து பள்ளிகளுக்கும், குடிதண்ணீருக்கும், அங்கன்வாடிகளுக்கும் செலவழிக்க வேண்டும். மேற்காணும் பணிகளுக்கு செலவிடுவதற்கு வரையறுக்கப்பட்ட கூர் நிதி போதுமானதாக இல்லை. இந்தச் சூழ்நிலையில், தொகுதியிலிருக்கிற பல்வேறு கிராமங்களுக்குச் செல்கிறபோது, அனைத்து ஊர்களிலும் இருக்கின்ற மக்கள், "எங்கள் ஊருக்கு ஒரு கலையரங்கம் கட்டித் தர வேண்டும்; எங்கள் ஊருக்கு ஒரு கலையரங்கம் கட்டித் தர வேண்டும்" என்று கேட்டுக்கொண்டிருக்கின்றார்கள். எனவே, ஓராண்டிற்கு, ஒரு தொகுதிக்கு, கிராமப்புறத்தில் குறைந்தபட்சம் 10 கலையரங்கங்கள் கட்டுவதற்கு மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10—45

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிக அளவில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி, அதேபோன்று நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி, அதுவல்லாமல், உள்ளூர் மேம்பாட்டுத் திட்டம், தன்னிறைவுத் திட்டம், வட்டார ஊராட்சி மற்றும்

2020 ஜனவரி 8]

மாவட்ட ஊராட்சி ஆகியவற்றின் பொது நிதி இப்படி பல்வேறு நிதிமூலம் புதிய கலையரங்கங்கள் கட்டப்படுகின்றன. சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், அவர்கள் அதிகமாக விரும்புகிறார்கள் என்பதால், அவர்களுடைய பெயர்களைப் போடுகிறோம். ஆனால், எல்லாத் தொகுதிகளிலும், நகரங்களில் இருக்கக்கூடியவர்கள் எல்லோரும் கலையரங்கங்களை விரும்புவதில்லை. எங்கள் பகுதியில் எல்லாம் குறைவாகத்தான் விரும்புகிறார்கள். சில இடங்களில் உள்ள எல்லா ஊர்களிலும் கலையரங்கங்கள் வேண்டுமென்று கேட்கிறார்கள். அந்தமாதிரி சூழ்நிலையும் இருக்கிறது. 2011—2012 ஆம் ஆண்டு முதல் 2015—2016 ஆம் ஆண்டு வரையில் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே 5 ஆண்டுகளில் மட்டும், ரூ.66 கோடியே 82 இலட்சம் மதிப்பில் 1,928 கலையரங்கங்கள் கட்டப்பட்டுள்ளன. அதேபோல், 2016—2017 ஆம் ஆண்டு முதல் 2019—2020 ஆம் ஆண்டு வரை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய மூன்றாண்டு ஆட்சிக் காலத்திலே, கிட்டத்தட்ட 39 கோடியே 54 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு, 704 கலையரங்கங்கள் கட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு, நாளது வரையில் 539 கட்டடங்கங்கள் கட்டப்பட்டுள்ளன. எஞ்சிய 165 கலையரங்கங்களுக்கான பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ஆகவே, இருக்கக்கூடிய சூழ்நிலையைப் பொறுத்து, கண்டிப்பாக ஒப்படைக்கப்பட்ட பொது நிதியிலிருந்தும்கூட கலையரங்கங்கள் கட்ட வாய்ப்புகள் இருக்கின்றன. எனவே, குறிப்பாக ஒன்றிரண்டு கலையரங்கங்கள் வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னால், கண்டிப்பாக அந்தப் பகுதியிலே கலையரங்கம் கட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 10, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன், மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*